**தலைப்பு 318 – உவா மாகாண சபை - 2022**

---

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணிகள்

### 1.1 தூரநோக்கு

"சீர்மையான நிலைபேறான அபிவிருத்தியை நோக்கி"

### 1.2 செயற்பணி

"மக்களுடைய வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் நோக்கில் விளைதிறனுடனும் உற்பத்திதிறனுடனும் நிறைந்த சேவையை வழங்குவதற்காக வளங்களை அணி திரட்டல் மற்றும் உயர்ந்த முறையில் பயன்படுத்தல்".

### 1.3 செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பாடுகள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுதல்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

ஊவா மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 29,711 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா 28,466 மில்லியன் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய ரூபா 1,245 மில்லியன் அல்லது தேறிய நிதியேற்பாட்டின் 4.1 சதவீதமான நிதியேற்பாடு எஞ்சியிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 26,958 | 26,606 | 352 | 1.3 |
| மூலதனம் | 2,753 | 1,860 | 893 | 32.4 |
| **மொத்தம்** | 29,711 | 28,466 | 1,245 | 4.1 |

## 3. கணக்காய்வு அவதானிப்புக்கள்

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.